| O.S.No. 196/2024 | PW1: திரு.கோகுலகண்ணன்<br>த/பெ. திரு. ஆனந்தன் | 10-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் தூளி கிராமத்தில் பிறந்ததிலிருந்து வசிக்கிறேன். எனக்கு தற்போது 31 வயது. தனியார் டூரிஸ்டில் டிரைவர் வேலை செய்கிறேன். எனக்கு ஒரு நாளைக்கு வேலைக்கு போனால் ரூ.800/- முதல் ரூ.1,000/- வரை சம்பளம் வரும். தூளியில் சுதாகர் என்பவர் எனது உறவினர். பிரதிவாதி ரகு எனக்கு நெருங்கிய உறவினர். பாண்டிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சுதாகர் என்பவர் வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்றால் அது எனக்கு தெரியாது. சுதாகரிடம் ரகு கடன் வாங்கும்போது என்னை ஜாமீனுக்காக அழைத்து சென்றார் என்றால் இல்லை. நான் வழக்கில் சொல்லியுள்ள தேதியில் பிரதிவாதி ஊரில் இல்லை என்றாலும், அதற்கு முன்பாக பிரதிவாதி சுதாகரிடம் கடன் வாங்குவதற்காக என்னை ஜாமீனுக்காக அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சுதாகர் என் மூலமாகத்தான் அனைத்து பணப்பரிவர்த்தனைகளையும் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

2. பிரதிவாதி ரகு என்னிடம் கொடுத்த பணத்தினை நான் சுதாகருக்கு சரிவர கொடுக்கவில்லை என்றாலும், நானே செலவு செய்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதி கொடுத்த பணத்தினை சரிவர சுதாகருக்கு பைசல் செய்யாததால் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் பிரதிவாதி என்னிடம் ஏற்கனவே என்னிடம் கொடுத்து வைத்த பாண்டினை பூர்த்தி செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாண்டில் எனது அண்ணன் ரமேஷ், மாமா சுதாகர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். சுதாகர் எனக்கு மாமா உறவு முறை.

3. நான் வழக்கில் பாண்டு பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்கவனவே பிரதிவாதி பாண்டு பத்திரத்திலும், வெற்று பாண்டிலும் கையெழுத்து போட்டு சுதாகருக்கு கொடுத்ததை நான் துஷ்பிரயோகம் செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும், அதற்கு ஈடாக எந்தவித பாண்டு பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சுதாகரிடம் முத்திரைத்தாளில்தான் கையொப்பமிட்டுக்கொடுத்தார் என்றாலும், எனவே, என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- கோகுலகண்ணன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.10 11:20:07 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**